# 1993

## ஜனவரி முதல் ஒக்டோபர் வரை

## மேற்கொள்ளப்பட்ட

# செயற்பாடுகள்


## பி. பி. தேவராஜ்

இந்துசமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய கலாசார அலுவல்கள்

இராஜாங்க அமைச்சகத்தினால்

1993 ஜனவரி முதல் ஒக்டோபர் வரை

மேற்கொள்ளப்பட்ட

# செயற்பாடுகள்

**மாண்புமிகு பி. பி. தேவராஜ் - பா. உ.**

இந்துசமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் 1993 ஜனவரி முதல் ஒக்டோபர் வரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய அறிக்கை

## முன்னுரை

இந்துமக்களின் போற்றுதலுக்குரிய பாரம்பரியத்தையும் விழுமியங்களையும் புத்தூக்கம் பெறச்செய்தலும், பலப்படுத்தி நிலைநிறுத்துவதும் தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்பாடுறச் செய்வதும் இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் பிரதான நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு இணங்க இந்த இராஜாங்க அமைச்சு 1991 - 95 காலத்துக்கான 5 ஆண்டு செயற்திட்டமொன்றினை வகுத்துள்ளது.

இந்துக்களிடம், குறிப்பாக இளம் தலைமுறையினர் மத்தியில் சமய விழுமியங்களையும் ஆன்மீகக் கல்வியையும் ஊக்கி வளர்க்கக்கூடிய செயற்பாடுகளை இத்திட்டம் கொண்டுள்ளது. இத்திட்டத்தில் இந்துசமய கலாசார விழுமியங்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைளும் திட்டமிடப்பட்டுள்ளன. தமிழ்மொழி, இலக்கியம், கலைகள் முதலியவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளையும், இத்துறையிலீடுபட்டுள்ள நிறுவனங்களின் பணிகளுக்கு ஆதரவளித்து அவற்றை பலமுறச் செய்வதற்குரிய வழிகளையும் இத்திட்டம் கொண்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை இந்துசமய கலாசார அமைச்சின் மேற்பார்வையுடனும் இதனோடு இணைந்தும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் முதலிரு ஆண்டுகளில் குறிப்பிடக்கூடியளவு முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில் பல கருத்திட்டங்களின் நோக்கங்களும் எல்லைகளும் விஸ்தரிக்கப்பட்டும், சில புதிய செயற்பாடுகள் சேர்க்கப்பட்டும் உள்ளன. முழு நிகழ்ச்சித்திட்டங்களையும் நிறைவேற்றும் வேகமும் துரிதப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக 1993 ஜனவரி முதல் அக்டோபர் வரையுள்ள காலத்தில், அபிவிருத்தியில் கணிசமான முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கடமைகள் செயற்பாடுகளை பரவலாக பின்வரும் தலைப்புகளின் கீழ் வகுக்கலாம்.

1. இந்துசமய கலாசார அலுவல்கள் தொடர்பான நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்
2. தமிழ்மொழி, இலக்கியம், கலாசாரம், கலைகளை மேம்படுத்துதல்
3. இந்துசமயம், தமிழ்மொழி பற்றிய ஆய்வு முயற்சிகள்
4. இந்து கலாசார நிதியம்

## 1. இந்துசமய கலாசார அலுவல்கள் தொடர்பான நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்

### 1. 1 அறநெறிப் பாடசாலைகள்

அறநெறிப் பாடசாலை என்னும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான கருத்திட்டமாக உள்ளது. 1992 டிசம்பர் 31 அன்று 302 அறநெறிப் பாடசாலைகள் இயங்கி வந்தன. ஞாயிற்றுக் கிழமை தோறும் நடைபெறும் இவ் அறநெறிப் பாடசாலைகளில் 45477 மாணவர்கள் பயின்றனர். அவர்களுக்கு 1491 ஆசிரியர்கள் தொண்டு அடிப்படையில் போதித்தனர்.

இவ்வாண்டின் முதற் 10 மாதங்களில், இப்பாடசாலைகளின் எண்ணிக்கை குறிப்பிடக்கூடிய வகையில் அதிகரித்துள்ளது. 1993 அக்டோபர் இறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 446; மாணவர் தொகை 57530; ஆசிரியர்கள் 2107.

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு விசேஷ பயிற்சியையும் அறிவையும் அளிப்பதற்கான கொழும்பு, கேகாலை, கல்முனை, மட்டக்களப்பு, கண்டி, நாவலப்பிட்டி, திருகோணமலை முதலிய இடங்களில் மாவட்டக்கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. மேலும் இவ்வாறான கருத்தரங்குகள் களுத்துறை, அவிசாவளை, கொழும்பு முதலிய இடங்களில் நடைபெறவுள்ளன. முந்திய ஆண்டுகள் போல அன்றி, இவ்வாண்டில் இக்கருத்தரங்குகள் பெரும்பாலும் அவ்வப் பகுதிகளிலுள்ள மத்திய இந்து நிறுவனங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டன. இவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வழிநடத்தும் பணியை மட்டும் திணைக்களம் மேற்கொண்டது.

தொண்டர் ஆசிரியர்களின் ஆற்றலை மேலும் வளர்க்கும் பொருட்டு ''ஆசிரியர் வழிகாட்டி'' என்னும் விசேட நூலொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. மாணவரின் சமய அறிவைப் பூரணப்படுத்துவதற்கு வாசிப்புக்குத் தேவையான பல நூல்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அறநெறிப் பாடசாலைகளில் பயன்படுத்துவதற்கான வரவுப் பதிவேடு, அப்பியாச கொப்பிகளை அச்சிட்டு வழங்கும் முன்னோடித்திட்டம் கண்டி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிதி கிடைப்பதைப் பொறுத்து இத்திட்டம், படிப்படியாக மற்றும் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

இங்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள காலப்பகுதியில், 48 அறநெறிப்பாடசாலைகளுக்கு மொத்தம் ரூபா 46,883/- நன்கொடை வழங்கப்பட்டுள்ளது

## 1. 2. பக்திப் பெருவிழா

தேசிய மட்டத்தில், இலங்கையில் முதற்தடவையாக பக்திப் பெருவிழா கொண்டாடப்பட்டது. 1993 பெப்ரவரி 21ந் திகதி கொழும்பில் நடைபெற்ற இவ்விழாவில், தென்னிந்தியாவைச் சேர்ந்த புகழ் பூத்த ஆன்மீக அருளுரையாளர் கிருபானந்த வாரியார் விருந்தினராகக் கலந்து கொண்டார். அன்று காலையில் நடைபெற்ற கருத்தரங்கில் முக்கிய ஆலயங்களின் அறங்காவலர்களும், இந்துசமய பிரபலஸ்தர்களும் பங்கு பற்றினர் ''ஆலயங்கள் சமுதாயத்தின் மையம்'' என்னும் தொனிப் பொருளில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் இந்து ''கலைக்களஞ்சி''யத்தின் இரண்டாவது தொகுதி உத்தியோகபூர்வமாக வெளியிட்டுவைக்கப்பட்டது.

மாலையில் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியும் கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பெற்றன. இந்துசமய கலாசார மேம்பாட்டிற்காக முக்கிய பங்களிப்பை ஆற்றியுள்ள 77 சமயப்பெரியார்கள் 'அருள் மொழி ஞான வள்ளல்' திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளினால் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர். இவ்வைபவத்தில் பின்வரும் கௌரவ விருதுகள் வழங்கப்பட்டன.

தெய்வீக மாமணி - 1

வேதாகமக்கிரியா சூடாமணி - 5

வேதாகம மாமணி - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டுசீர் மாமணி - 1

சிவநெறிச் செம்மல் - 13

ஞானசிரோன்மணி - 9

சைவநன்மணி - 9

இறைபணிச் செம்மல் - 15

அருட்கலைவாரிதி - 6

அருட்கலைத்திலகம் - 13

## 1. 3. இந்துசமய அறிவுப் போட்டிகள்

இந்து மாணவர்களின் சமய அறிவை வளர்ப்பதற்காக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டுதோறும் இப்போட்டிகளை நடத்தி வருகின்றது. அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே இப்போட்டிகள் உரியன.

முதலாவது சுற்றில் இப்போட்டிகள் மாவட்ட மட்டத்தில், கட்டுரை எழுதுதல், பேச்சு, பண்ணிசை ஆகியவற்றில் நடத்தப்பெற்று, மாவட்டத்தில் ஒவ்வொரு துறையிலும் முதல் மூன்று சிறந்த இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இரண்டாவது சுற்றில், மாவட்டங்களில் ஒவ்வொரு துறையிலும் முதற்பரிசு பெற்றவர்களை தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப் படுகின்றது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் 16 மாவட்டங்களிலிருந்து 950 மாணவர்கள் பங்குபற்றினர். இவ்வாண்டு 17 மாவட்டங்களிலிருந்து 3233 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். மாவட்டரீதியிலான போட்டிகள் நவம்பர் 7ந் திகதி நடைபெறவுள்ளன.

## 1. 4. இந்து ஆலயங்களுக்கு நிதிஉதவி

24 மாவட்டங்களைச் சேர்ந்த 2376 கோவில்கள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இதுவரை பதிவு செய்யப்பெற்றுள்ளன. இவற்றில் 745 விநாயகர் கோவில்கள், 845 அம்மன் கோவில்கள், 411 சுப்பிரமணியர் கோவில்கள், 76 சிவன் கோவில்கள், 299 ஏனைய தெய்வங்களின் கோவில்களாகும். விழாக்களுக்கான அழைப்பிதழ்கள், பிரசுரங்களின் பரிவர்த்தனை மூலமாக இக்கோவில்களுடனான தொடர்பு அடிக்கடி பேணப்பட்டு வருகின்றது. ஆலய நிர்வாகம் தொடர்பாக எழும் பிரச்சினைகளை வழக்குகளுக்குச் செல்லாமல் தீர்த்து வைப்பதிலும் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றது. சமயம் தொடர்பான குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கென 63 ஆலயங்களுக்கு சிறு சிறு தொகைகளாக மொத்தம் ரூபா 150,225/- இக்காலகட்டத்தில் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## 1. 5. இந்துசமய நிறுவனங்களுக்கு உதவி

816 இந்து நிறுவனங்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த இராஜாங்க அமைச்சினதும், திணைக்களத்தினதும் பெரும்பாலான மாவட்ட நிகழ்ச்சிச் செயற்பாடுகள், - சில கலாசார உத்தியோகத்தர்கள் மட்டுமே உள்ளதாலும், எமக்கென மாவட்டந்தோறும் நிர்வாக அமைப்புகள் இல்லாமையாலும் - இந்நிறுவனங்களினூடாகவே நிறைவேற்றப்படுகின்றன. இதனால், இந்நிறுவனங்கள் எமது நிகழ்ச்சிகளிலும் செயற்பாடுகளிலும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்வாறான 52 நிறுவனங்களுக்கு, சமய சார்பான விசேஷ கருமங்களை நிறைவேற்றுவதற்காக மொத்தம் ரூபா 68,362/- உதவி நிதியாக வழங்கப்பட்டது.

அனாதை இல்லங்களை நடத்துவதிலும், பாதிக்கப்பட்ட சிறார்களின் நலன்களைக் கவனிப்பதிலும் ஈடுபட்டுள்ள 7 நிறுவனங்களுக்கு விசேட நிதி உதவியாக மொத்தம் ரூபா 52,000/- வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. 6. இந்துசமய தத்துவப் பேருரைகள்

கடந்த 10 மாத காலத்தில் கொழும்பில் பின்வரும் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

| திகதி | சொற்பொழிவாளர் | | பொருள் |
|---|---|---|---|
| 9 - 1 - 93 | பிரம்மச்சாரி தர்மேஷ் சைதன்ய சின்மயா மிசன், கோயம்புத்தூர் | — | ''கீதை சொல்லும் வாழ்க்கை'' |
| 4 - 3 - 93 | திரு. வி. கே. ஜோதிராஜ் பிரம்மகுமாரி ராஜயோக நிலையம் மலேசியா. | — | ''உறவுகளின் இணக்கம் காணட தில் தியானம் எவ்வாறு உதவுகிறது'' |
| 25 - 3 - 93 | கவிமாமணி மதிவண்ணன் (திரு. எஸ். ராஜகோபாலன்) தமிழ்நாடு. | — | ''ஞானத்தமிழ்'' |
| 3 - 8 - 93 | ஆச்சார்ய யதீஸ்வரானந்தா இந்தியா. | — | ''தியானம் - ஆன்ம உணர்வும் அர்த்தமுள்ள முன்னேற்றப் பாதையும்'' |
| 8 - 8 - 93 | திரு. சுகிசிவம் தமிழ்நாடு. | — | ''சங்கரரின் சிந்தனைகள்'' |
| 30 - 9 - 93 | திரு. என். கிருஷ்ணமூர்த்திரெட்டி முன்னைநாள் நீதியரசர், தமிழ்நாடு | — | ''ஆலயங்களில் காணப்படும் நிர்வாகப் பிரச்சனைகள்'' |
| 21 - 10 - 93 | புலவர் க. சிவானந்தன் | — | ''நவரச நாயகி'' |
| 22 - 10 - 93 | டாக்டர். இராம். சவுந்தரவல்லி தமிழ்நாடு. | — | ''நவராத்திரியின் சிறப்பு'' |

பிரம்மச்சாரி தர்மேஷ் சைதன்ய, திருவாளர்கள் மதிவண்ணன், சுகிசிவம் ஆகியோரின் சொற்பொழிவுகள் வெளியூர் நகரங்களாகிய ஹட்டன், நுவரெலியா, சண்டி, திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டன.

## 1. 7. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிப்புற்ற ஆலயங்களின் புனருத்தாரணம்

1990 டிசம்பரில் நடத்தப்பட்ட கணிப்பீட்டின்படி, வடக்கு கிழக்கு மாகாணங்களில் இனப்பிரச்சினைகளின்போது மொத்தம் 1479 ஆலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இவ்வாலயங்களை திருத்துவதற்கு மீளமைப்பதற்கு மொத்தம் சுமார் 283 மில்லியன் ரூபா செலவேற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் சுருக்கமான குறிப்பு பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாவட்டம் | திணைக்களத்தில் பதியப் பட்டுள்ள கோவில்களின் எண்ணிக்கை | அழிவுற்ற கோவில்களின் எண்ணிக்கை | திருத்துவதற்கு புனரமைப்பதற்கான உத்தேச உதவி தொகை |
|---|---|---|---|
| அம்பாறை | 118 | 147 | 30,648,100/- |
| மட்டக்களப்பு | 463 | 283 | 26,660,739/- |
| திருகோணமலை | 101 | 199 | 33,470,500/- |
| வவுனியா | 155 | 136 | 15,706,000/- |
| மன்னார் | 61 | 37 | 6,969,000/- |
| முல்லைத்தீவு | 57 | 131 | 39,744,000/- |
| கிளிநொச்சி | 25 | 33 | 2,100,000/- |
| யாழ்ப்பாணம் | 627 | 513 | 127,792,953/- |
| | 1607 | 1479 | 283,091,292/- |

1990 டிசம்பருக்குப் பின் ஏற்பட்ட சேதங்கள் பற்றி இதுவரை மதிப்பிடப்படவில்லை.

ஆலயங்களின் நிர்வாகிகள், குறிப்பாக சிவில் நிர்வாகத்தின் கீழ் மீட்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தோர் புனர்நிர்மாணப் பணிகளுக்கு நிதிகோரி குரல் எழுப்புகிறார்கள். ஆனால் வணக்கத்தலங்களுக்கு நிதி உதவி வழங்குவது பற்றிய திட்டமெதனையும் அரசாங்கம் இதுவரை முறைப்படுத்தி வகுக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி, மீள்குடியமர்த்தல், புனர்வாழ்வு என்பவற்றிற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகின்றது.

பாதிப்பின் பிரமாண்ட அளவை அறிந்து கொள்வதற்காகவும் உரிய உதவி வழங்குவதற்கு திட்டமொன்றினை வகுத்துக்கொள்வதற்காகவும், 1990 டிசம்பருக்கு முன்னர் பாதிப்புற்ற ஆலயங்களின் விபரங்களைக் கொண்ட நூலொன்றினை அண்மையில் எமது இராஜாங்க அமைச்சு வெளியிட்டுள்ளது.

தமது சொந்த வளத்தைக் கொண்டு அல்லது பொது மக்களின் உதவியைக் கொண்டு அல்லது இரண்டுமாகச் சேர்ந்து ஆலயப் புனருத்தாரணப் பணிகளை மேற்கொண்டுள்ள அறங்காவலர்கள் உதவியைக் கோரும் பொழுது, எமது இராஜாங்க அமைச்சு அவர்களுக்கு பல்வேறு வகைகளில் உதவி வழங்கிவருகிறது. புகழ்பூத்த திருகோணமலை கோணேசர் ஆலயத்தை, வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்துடன் இணைந்து புனரமைப்புச் செய்து இதன் மகா கும்பாபிஷேகப் பெருவிழா 11. 2. 93 அன்று நிகழ்த்தப்பட்டது. இதற்கென ஜனாதிபதி நிதியத்திலிருந்து ரூபா 500,000/- உதவி நிதியாக பெற்றுக் கொள்ளப்பட்டது. மாந்தையிலுள்ள புராதனமிக்க திருக்கேஸ்வரம் கோவிலையும் ஆலய நிர்வாகத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 21 - 6 - 93 அன்று அங்கு சென்று பார்வையிடப்பட்டது.

## 1. 8. சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி

1982ல் மட்டக்களப்பில் நிறுவப்பெற்ற இக்கல்லூரி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. நான்காண்டு டிப்ளோமா கற்கைநெறி இங்கு நடத்தப்படுகின்றது. முன்னர் இங்கே கற்கைநெறியை முடித்தவர்களை அங்கீகரிப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை இருந்தது ஆனால் இப்பொழுது இக்கல்லூரி, இசைநடன டிப்ளோமா சான்றிதழ் வழங்குவதற்குரிய தேசிய நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இங்கு நான்காண்டு கற்கைநெறியை திருப்திகரமாகப் பூர்த்தி செய்தவர்கள் இசைநடன ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது,

கற்கைநெறியை முடித்து சித்தி பெற்று வெளியேறிய 12 மாணவர்களுக்கு பட்டமளிப்பு வைபவம் 1993 ஒக்டோபர் 31 அன்று கொழும்பில் நடைபெற்றது. சுற்றுலாத்துறை, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு எஸ். தொண்டமான் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார்.

இப்பொழுது இக்கல்லூரியில் 57 மாணவர்கள் பயில்கின்றனர். இவ்வாண்டு இசைத்துறைக்கு 18 மாணவர்களும் நடனதுறைக்கு 10 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக்கல்லூரி பற்றி கடந்த காலத்தில் சில குறைபாடுகள் இருந்தன. நிரந்தர அதிபர் ஒருவரை நியமிப்பதற்கும், ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இப்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கட்டிடத்துக்கான திருத்தங்களைச் செய்யவும் மேலதிக தளபாடங்கள் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 1. 9. நல்லை ஆதீனத்துக்கு நிதி உதவி

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள், தமது அடியார் குழுவுடன் தென்னிந்தியாவுக்கு திருத்தல யாத்திரை மேற்கொள்ளும் வழியில் 1993 ஜுலை மாத முற்பகுதியில் கொழும்பு வந்தார். யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னரும் செப்டம்பர்/ஒக்டோபர் காலத்தில், யாழ்ப்பாணம் செல்வதற்குப் போக்குவரத்து வசதியில்லாத காரணத்தால் அவர் கொழும்பில் தங்கியிருந்தார். கொழும்பில் அவர் தரித்திருந்த வேளையில், கௌரவ இராஜாங்க அமைச்சரையும் அதிகாரிகளையும் சந்தித்து யாழ்ப்பாணக்குடாநாட்டில் வணக்கத்தலங்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்களையும், பூஜைக்குத் தேவையான கற்பூரம், தேங்காய் எண்ணை முதலியவை அங்கு கிடைக்காமலிருப்பது பற்றியும், தமது ஆதீனத்தில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளையும், ஆதீனத்தின் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களைப் பற்றியும் எடுத்துரைத்தார். இவ்விடயங்கள் மேதகு ஜனாதிபதி அவர்களின் கவனத்துக்கு உடனே தெரிவிக்கப்பட்டு, ஜனாதிபதி நிதியத்திலிருந்து ரூபா 250,000/- விசேட நிதி உதவியாக வழங்குமாறு விதந்துரைக்கப்பட்டது. மேதகு ஜனாதிபதி அவர்கள் சுவாமிஜி அவர்களை நேரில் சந்திப்பதற்கு விரும்பிய போதிலும், துரதிர்ஷ்டவசமாக அதை ஒழுங்கு செய்ய முடியாமற் போய்விட்டது.

ஆதீனத்தின் செயற்பாடுகளுக்கான மானியமாக 1993ம் ஆண்டில் திணைக்களத்தினால் ரூபா 25,000/- வழங்கப்பட்டது. இவ்வாதீனத்தை, அனைத்திலங்கை ஆன்மீக மையமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது எமது இராஜாங்க அமைச்சின் விருப்பமாகும்.

## 1. 10. இந்து யாத்திரிகர் விடுதி, கதிர்காமம்

1990ம் ஆண்டு நிறுவப்பட்ட இவ்விடுதியில் 18 அறைகளும் 5 மண்டபங்களும் உள. இலங்கையின் சகல பகுதிகளிலுமிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரை செல்லும் இந்து மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக முக்கியமாக இது நிறுவப்பட்டது. இங்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள காலப்பகுதியில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடுதியில், எல்லா சமயங்களையும் சேர்ந்த 20,000/- யாத்திரிகர்கள் தங்கியுள்ளனர். வருமானமாகச் சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 538,085/- ஆகும்.

சைவ உணவுச்சாலை ஒன்று இவ்விடுதியில் அமைக்கப்படவேண்டுமென்பது. நீண்ட காலமாக உணரப்பட்ட தேவையாகும். ரூபா 15 இலட்சம் செலவில், இவ்வுணவுச்சாலைக்கென தனியான கட்டிடம் இப்போது அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு முடிவுக்குள் இங்கு உணவுச் சாலை இயங்கத் தொடங்கும். அறைகள், கட்டிடம், வடிகால் முதலியவற்றுக்கான திருத்தங்கள் சீர் செய்தல் முதலியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றுக்கென இதுவரை ரூபா 140,000/- செலவிடப்பட்டுள்ளது. ரூபா 60,375/- பெறுமானமுள்ள தளபாடங்களும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டின் வரவு — செலவு நிதியிலிருந்து உணவுசாலைக்கான தளபாடங்களும் உபகரணங்களும், பிரதான கட்டிடத்துக்கான 'அஸ்பெஸ்டஸ்' கூரைத்தகடுகளும் பெற்றுக் கொள்ளப்படும்.

## 1. 11. சமய விழாக்களின் பங்கேற்பு

இவ்வாண்டின் பொங்கல் விழாவினை எமது இராஜாங்க அமைச்சு அடக்கமான வகையில் 1993 ஜனவரி 15 முதல் 17ந் திகதி வரை திருக்கோணமலையில் ஏற்பாடு செய்து நடத்தியது. ஆலடிப்பிள்ளையார் கோவிலில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. ஸ்ரீ சண்முக வித்தியாலத்தில் புத்தகக்கண்காட்சியும், இந்துக்கல்லூரி திறந்தவெளி அரங்கில் கலாசார நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. இந்த இரு நிகழ்ச்சிகளும் விழா நடைபெற்ற மூன்று தினங்களிலும் நடைபெற்றன. மேலும் விழாவின் இரண்டாவது நாள் இலக்கியகருத்தரங்கும், இறுதி நாளன்று கவியரங்கும் இடம்பெற்றன. மாண்புமிகு இராஜாங்க அமைச்சரும், வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரும் இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்.

சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்தில் 1993 பெப்ரவரி 19ம் திகதி நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவிலும் எமது இராஜாங்க அமைச்சு பங்குபற்றியது. இவ்விழாவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. கே. மதிவாணனின் சிறப்புச் சொற்பொழிவும், பல இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

1993 ஆடி 31ந் திகதியும் ஆகஸ்ட் 1ம் திகதியும் மிக விமரிசையாக கொழும்பில் நடைபெற்ற வேல்விழாவின்போது, எமது இராஜாங்க அமைச்சு காலிமுகத்திடலில் விசேட பந்தல் அமைத்து இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ததுடன், அடியார்களுக்கு குளிர்பானமும் வழங்கியது.

1993 ஒக்டோபர் 16ந் திகதி முதல் 24ந் திகதி வரை நடைபெற்ற நவராத்திரி விழாவையொட்டி எமது இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் விசேட பூஜைகள் நடத்தப்பெற்றன.

## 1. 12 யோகக்கலை பற்றிய கருத்தரங்கும் வகுப்புகளும்

''யோகம் பற்றிய ஆராய்ச்சினதும் அணுகுமுறைகளினதும் எல்லைகள்'' என்னும் தலைப்பிலான ஒரு கருத்தரங்கு 1993 ஏப்ரல் 3, 4ம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இதன் ஆரம்ப அமர்வின் பிரதம விருந்தினராக இலங்கையின் முன்னைநாள் ஜனாதிபதி மேதகு ஜே.ஆர்.ஜெயவர்தனா கலந்து கொண்டார். செயல்முறைகளோடிணைந்த பிரதான உரையாளர்கள் அனைவரும் பங்களூர் விவேகானந்த கேந்திர யோக ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களாவர். அந்தக் குழுவுக்கு தலைவராக அந்நிறுவனத்தின் இயக்குந



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரான டொக்டர் எச். ஆர். நாகேந்திரா வருகை புரிந்தார்.

ஒருங்கிணைந்த ஆளுமை அபிவிருத்திக்கான கல்வியில் யோகா, நிர்வகிப்பில் ஏற்படும் அழுத்தம், மற்றும் உள்ளார்ந்த திறமைகளை வளர்ப்பதில் யோகாவின் பிரயோகங்கள் போன்ற விஷயங்களை இக்கருத்தரங்கு கொண்டிருந்தது. பல் வேறு துறைகளைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட தொகையினர் பங்குபற்றிய பிரதான கருத்தரங்கைத் தவிர, இலங்கை வர்த்தக சம்மேளனத்தைச் சேர்ந்த வர்த்தகத்துறை நிர்வாகிகள் மட்டும் பங்குபற்றிய கருத்தரங்கு, கொழும்பு மாநகர சபையின் வைத்திய அதிகாரிகளுக்கான கருத்தரங்கு என மற்றும் இரு கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. இவை தவிர, பிராயானாமம், தியானம், யோகமுறையினால் சிகிச்சை, ஆலோசனைச் சிகிச்சைநிலையம் ஆகியவை, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபம், பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபம், கொட்டாஞ்சேனை மோடி மண்டபம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. அதே காலத்தில் கண்டி, நுவரெலியா ஆகிய இடங்களில் யோக பயிற்சிகளை செய்து காட்டும் வகுப்புகளும் நடைபெற்றன.

இதன் தொடர் நடவடிக்கைகளுக்காக கொழும்பைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர், மருத்துவக்கல்லூரி இறுதி ஆண்டு மாணவர் ஆகிய இருவர் குறுகிய காலப் பயிற்சிக்காக இலங்கையிலிருந்து பங்களூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதற்கான செலவை மடம் அறக்கட்டளையாளரது கலாநிதி பொ. விக்கினராஜா அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார். எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கலலந்துரையாடுவதற்காக கௌரவ இராஜாங்க அமைச்சரும் பங்களூருக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

## 1. 13. முக்கிய தேசிய நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

1. 13. 1. மேதகு ஜனாதிபதி அவர்கள் பதவியேற்ற நான்காவது ஆண்டுவிழா

மேதகு ஜனாதிபதி அவர்கள் பதவியேற்ற நான்காவதாண்டு நிறைவினைக் குறிக்கு முகமாக 1993 ஜனவரி 2ந் திகதி கண்டி கட்டுகலை பிள்ளையார் கோவில் சமய நிகழ்ச்சிகள் அனுஷ்டிக்கப்பட்டன. இதில் மேதகு ஜனாதிபதி அவர்களும், பிரதம மந்திரி அவர்களும் பங்குபற்றினர்.

1. 13, 2. தேசியதினக் கொண்டாட்டங்கள்

தேசிய தினத்தைக் குறிக்குமுகமாக 1993 பெப்ரவரி 4ந் திகதி கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெற்ற விசேட சமய நிகழ்ச்சிகளில் மாண்புமிகு அமைச்சர் எஸ். தொண்டமான் அவர்களும் பல இராஜாங்க அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

1. 13. 3. ஜனாதிபதி இடம்பெயர் சேவை

திருகோணமலை மாவட்டத்துக்கான ஜனாதிபதி இடம்பெயர் சேவை 1993 ஜனவரி 20 முதல் 31ந் திகதி வரை நடைபெற்றது. பொங்கல் காலத்தில் விசேட கலாசார நிகழ்ச்சிகளை நடத்துதல், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கட்கான கருத்தரங்கு, ஆலயங்களுக்கும், இந்து நிறுவனங்களுக்கும் நிதி உதவி புரிதல் உட்பட விசேட நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதி இடம்பெயர் சேவையையொட்டி நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதி இடம்பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை நாட்களில் விசேட சமய நிகழ்ச்சிகள் கோணேசர் கோவிலிலும் ஸ்ரீ பத்திரகாளி கோவிலிலும் ஏற்பாடு செய்யப்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான ஜனாதிபதி இடம்பெயர் சேவை 1993 ஜூலை 22 முதல் 25ந் திகதி வரை நடைபெற்றது. இந்து ஆலயங்களுக்கும் சமய நிறுவனங்களுக்கும், அறநெறிப் பாடசாலைகளுக்கும் உதவி நிதி அளித்தல், மாநகர நூலகத்துக்கும், விஸ்வகர்ம கலாசார நிலையத்துக்கும் நூல்களை அன்பளிப்புச் செய்தல் உட்பட பல நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. வீரகத்திப் பிள்ளையார் கோவில், மாமாங்கேஸ்வரர் கோவில் ஆகிய ஆலயங்களில் இந்நாட்களில் விசேட சமய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

1.13.4. கிராம எழுச்சி 1993

1993 ஜூன் 23 முதல் ஜூலை 23ந் திகதி வரை மிகிந்தலையில் நடைபெற்ற கிராம எழுச்சி வைபத்தை முன்னிட்டு, ஏப்ரல் /மே மாதங்களில் அனுராதபுர மாவட்டத்திலுள்ள முக்கியமான அனைத்து இந்துக்கோயில்களும் நேரில் சென்று பார்வையிடப்பட்டது. பின்வரும் ஏழு கோவில்களின் புனர் நிர்மாணப்பணிகளுக்கென ரூபா 100,000/- பயன்படுத்தப்பட்டது.

(அ) நுவரவேவா பிள்ளையார் கோவில்

(ஆ) கெக்கிராவ விநாயகர் கோவில்

(இ) ஹபறணை சர்வசித்தி விநாயகர் கோவில்

(ஈ) மிகிந்தலை பத்தினி அம்மன் கோவில்

(உ) அனுராதபுர ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

(ஊ) மரதங்கடவல பிள்ளையார் கோவில்

(எ) அனுராதபுரம் ஸ்ரீ கணேஸ்வரர் தேவாலயம்

நகர நாட்டுத்திட்டமிடல் திணைக்களத்தினால் இதற்கென ரூபா 75,000/- நிதி உதவி அளிக்கப்பட்டது. மிகுதிச் செலவுகளை எமது திணைக்களத்தினால் செய்யப்பட்டது.

1993 ஜூன் 17ந் திகதி நுவரவேவா பிள்ளையார் கோவிலில் விசேட பூஜை ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது.

## 1.14. புத்தக வெளியீடுகள்

மாண்புமிகு இராஜாங்க அமைச்சரின் தலைமையில் பின்வரும் நூல்களின் வெளியீட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

(அ) 30-4-93 'வினைதீர்க்கும் விநாயகர்'
நூலாசிரியர்; கே. தங்கவேலாயுதம்

(ஆ) 30-7-93 'கோணேசர் கல்வெட்டு'
பதிப்பாசிரியர்: பண்டிதர் இ. வடிவேல்

(இ) 24-10-93 ''கலையரசி ருக்மணி தேவி கண்ட கலைக் கோவில்''
நூலாசிரியர்: ஸ்ரீமதி கமலாராணி

## 1.15. ஏனைய விசேட நிகழ்ச்சிகள்

பின்வரும் சிறப்பு நிகழ்ச்சிகளையும் இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) 16 - 2 - 93 - திருகோணமலை சிவ யோக சமாஜத்தைச் சேர்ந்த சுவாமி கங்கா தரானந்தாஜீ அவர்கள் மகாசமர் தி யெய்திய இரண்டாவ தாண்டு ஞாபகார்த்தக் கூட்டம். இக்கூட்டம் இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(ஆ) 11 - 6 – 93 - யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர் திரு. என். வி. எம். நவரத்தினத்தின் பண்ணிசைக் கச்சேரி.

இந்நிகழ்ச்சி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

## 1. 16. மட்டக்களப்பு கலாசார நிலையம்

முன்னைய நிகழ்ச்சித்திட்டப்படி, முக்கிய மாவட்ட தலைநகர்களில், கலாசார நிலையங்களை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மட்டக்களப்பு நிலையத்தின் நிர்மாணிப்பு வேலைகள் துரதிஷ்டவசமாக அத்திவாரச்சுவர் மட்டத்துக்கு மேல் தொடர முடியாமற் போனது. இவ்வாண்டில் ரூபா 1,000,000/- ஒதுக்கப்பட்டு, மாகாண கட்டிட திணைக்களத்தினூடாக இக்கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## 1. 17. கோபுரம் இதழ்

இவ்வாண்டில், செய்திகளையும் செயற்பாடுகளையும் கொண்ட 'கோபுரம் சஞ்சிகை' யின் இரு இதழ்களை திணைக்களம் வெளியிட்டுள்ளது.

# 2. தமிழ்மொழி, பண்பாடு இலக்கியம், கலைகளின் அபிவிருத்தி

## 2. 1. வருடாந்த தமிழ் சாகித்திய விழா

இவ்வாண்டின் தமிழ் சாகித்திய விழா, மிக விரிந்த அடிப்படையில் 1993 ஆகஸ்ட் 20 முதல் 22ந் திகதி வரை கொழும்பில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. கொழும்பு 7ல் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் 1993 ஆகஸ்ட் 20ஆம் திகதி காலை 9.30 மணிக்கு, நாட்டார் வழக்காற்றியல் பற்றிய பிராந்தியக் கருத்தரங்கை பிரதம மந்திரி மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஆரம்பித்து வைத்ததனைத் தொடர்ந்து, விழாவின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 20 கட்டுரைகளையும் 15 வாழ்த்துச் செய்திகளையுங் கொண்ட சிறப்பு மலரும் இவ்வைபவத்தில் வெளியிடப்பட்டது.

விழாவின் ஓரம்சமாக, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் ஆகஸ்ட் 20 21ந் திகதிகளில் புத்தகக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இக்காட்சி வைபவரீதியாக ஆகஸ்ட் 20ந் திகதி பி. ப. 3.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நீலன் திருச்செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அரிய நூல்கள், சஞ்சிகைகளும், அண்மையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற நூல்களும் இக்கண்காட்சியில் இருநாட்களிலும் காட்சிக்கு வைக்கப்பெற்றிருந்தன. இக்கண்காட்சியில், திணைக்களத்தின் விற்பனைப் பீடமும் சில தனியார் புத்தக வினியோகஸ்தர்களின் புத்தக விற்பனை பீடங்களும் இயங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று நாட்களிலும் கலாசார நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. சாகித்திய விழாவின் பிரதான தொனிப்பொருள் 'நாட்டார் வழக்காற்றியல்' என்பதனால் பெரும்பாலான கலாசார நிகழ்ச்சிகள், எமது பண்பாட்டின் இந்த அம்சத்தைப் பிரதிபலிப்பவையாக அமைந்திருந்தன. கலாசார நிகழ்ச்சிகளில்' பிரதேச சாகித்திய விழாக்களில் இடம்பெற்ற சிறந்த நிகழ்ச்சிகளுடன் தலைநகரைச் சேர்ந்தவர்களின் கலைநிகழ்ச்சிகளையும் மேடையேற்றுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. முதல் இரு நாட்களிலும் புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற கலாசார நிகழ்ச்சிக்கு வர்த்தக வியாபாரத்துறை அமைச்சர் மாண்புமிகு ஏ. ஆர். மன்சூர் அவர்கள் ஆகஸ்ட் 20ந் திகதி அன்றும், தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் மாண்புமிகு ரைறோன் பெர்னாண்டோ அவர்கள் ஆகஸ்ட் 21ந் திகதி அன்றும் விருந்தினர்களாக பங்குபற்றினர்.

இவ்விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகளான விருது வழங்கல், கலாசார நிகழ்ச்சிகள் முதலியவை ஆகஸ்ட் 22ந் திகதி வெள்ளவத்தை இராமகிருஸ்ண மண்டபத்தில் நடைபெற்றது. மேல்மாகாண ஆளுநர் மேதகு எஸ். சர்வானந்தா கல்வி இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு ஆர். எம். புலேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் ஜே. திவ்வியநாதன், மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்விமான்களாகிய டாக்டர் எஸ். டி. லூர்து, டாக்டர் ஏ. பாண்டுரங்கன் ஆகியோர் முக்கிய விருந்தினர்களாக இவ்விழாவில் பங்குபற்றினர். சிறந்த இலக்கிய நூல்களுக்கான வருடாந்த சாகித்திய விருது 7 எழுத்தாளர்களுக்கு அளிக்கப்பட்டது. சிறுகதை, நாவல், கவிதை, சமூகவிஞ்ஞானம், மானிடவியல் முதலிய துறைகளில் 1992ல் வெளியிடப்பட்ட நூல்களில் சிறந்தவையெனத் தேர்ந்தெடுக்கப்பெற்ற நூல்களை எழுதிய மேற்படி 7 எழுத்தாளர்களுக்கும் ஒவ்வொருவருக்கும் ரூபா 10,000/- பணப்பரிசில்களும் அளிக்கப்பட்டன. சிறந்த நூல்களைத் தேர்வு செய்வதற்கென இராஜாங்க அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசேட நடுவர்குழு, இந்நூல்களைத் தேர்ந்தெடுத்தனர்.

இதனைத்தவிர, தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, கலைத்துறைகளின் அபிவிருத்திக்கு குறிப்பிடக்கூடிய பங்களிப்புச் செய்த 62 முக்கிய பிரமுகர்கள் இவ்விழாவில் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர், வழங்கப்பெற்ற பட்டங்களின் சுருக்கக் குறிப்பு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| இலக்கியச் செம்மல் | — | 8 |
| தமிழ்ஒளி | — | 10 |
| தமிழ்மணி | — | 21 |
| கலைச்செம்மல் | — | 3 |
| கலாஜோதி | — | 11 |
| கலைமணி | — | 9 |

நாடகம், இசை, நடனம், மற்றும் கலைத்துறைகளிலீடுபட்டு சிறந்த பணியாற்றிவருபவர்களுக்கு வெவ்வேறான பட்டங்கள் வழங்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

கலைஒளி எம். முத்தையா பிள்ளை ஞாபகார்த்தக்குழு, வீரகேசரி பத்திரிகையுடனும், இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சுடனும் இணைந்து நடத்திய மலையகச் சிறுகதைப் போட்டியில் முதல் மூன்று சிறுகதைகளையும் எழுதியவர்களுக்கு இவ்விழாவில், முறையேரூபா 7,500/- ரூபா 5,000/- ரூபா 2,500/- கொண்ட பணப்பரிசில்களும் இவ்விழாவில் வழங்கப்பட்டது.

## 2. 2. தமிழ் நாட்டாரியல் பிராந்தியக் கருத்தரங்கு

மேற்படி கருத்தரங்கு 1993 ஆகஸ்ட் 20 முதல் 23ந் திகதி வரை கொழும்பு 7ல் உள்ள ''சௌசிறிபாய'' மண்டபத்தில் நடைபெற்றது, வெளிநாட்டைச் சேர்ந்த 8 பேராளர்களும், உள்ளூர் பேராளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81 பேரும் இதில் பங்குபற்றினர். வெளிநாட்டைச் சேர்ந்த 8 கல்விமான்களும் 12 உள்ளூர் கல்விமான்களும் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தனர்.

முன்னர் குறிப்பிட்டவாறு, இதன் ஆரம்பவைபவம், ஆகஸ்ட் 20ந் திகதி காலை 9.30க்கு இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக இலங்கைப் பிரதம மந்திரி மாண்புமிக்க ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் முக்கிய விருந்தினர்களாக கல்வி, உயர்கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு டபிள்யு. ஜே எம். லொக்குபண்டார, வர்த்தக வியாபாரத்துறை அமைச்சர் மாண்புமிகு ஏ. ஆர். மன்சூர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். இந்தியாவில், தமிழ்நாட்டார் வழக்காற்றியல் துறை பற்றிய புலமையாளரான டாக்டர் எஸ்.டி. லூர்து பிரதான உரையை நிகழ்த்தினார். பின்வரும் கல்விமான்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்து ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்ததுடன், நிகழ்ச்சிகளில் முக்கிய பங்களிப்பாற்றினர். பாளைங் கோட்டை தூய சவேரியார் கல்லூரி நாட்டாரியல்துறைத் தலைவரும் பேராசிரியருமான எஸ். டி. லூர்து, பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக தமிழாய்வியல் துறைத்தலைவரும் பேராசிரியருமான டாக்டர் ஏ. பாண்டுரங்கன், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக தமிழ் மொழியியல்துறை விரிவுரையாளர் டாக்டர் வி. தயாளன், தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ஏ. சுப்பிரமணியம்.

இக்கருத்தரங்கின் செயலமர்வுகளின் தொகுப்பு திணைக்களத்தினால் தனியான பிரசுரமாக வெளியிடப்படும்.

## 2. 3. பிரதேச சாகித்திய விழாக்கள்

பிரதான தேசிய சாகித்திய விழாவுக்கு முன்னோடியாக, பிரதேச மட்டங்களில், பின்வரும் இடங்களில் பிரதேச சாகித்திய விழாக்கள் ஏற்பாடு செய்யப்பெற்றன.

| | | | |
|---|---|---|---|
| பண்டாரவளை | — | ஜூன் | 26 - 27 |
| கல்முனை | — | ஜூலை | 4 |
| மாத்தளை | — | ஜூலை | 11 |
| கண்டி | — | ஜூலை | 24 |
| வவுனியா | — | ஜூலை | 25 |
| மட்டக்களப்பு | — | ஆகஸ்ட் | 7 - 8 |
| நுவரெலியா | — | ஆகஸ்ட் | 13 |
| நாவலப்பிட்டி | — | ஆகஸ்ட் | 14 |
| திருக்கோணமலை | — | ஆகஸ்ட் | 15 |

இவ்விழாக்களிலும் 'நாட்டார் வழக்காற்றியல்' என்பதே முக்கிய தொனிப் பொருளாக அமைந்திருந்தது. இவ்விழாக்களின் பல்வேறு நிகழ்ச்சிகளை சிறப்பாக அமைப்பதில் மாகாண சபைகள், பிரதேச சபைகள், இந்து மன்றங்கள் முதலியவை பெரும் உற்சாகம் எடுத்தன. இவ்விழாக்களில் முக்கிய நிகழ்ச்சிகளாக கலாசார ஊர்வலங்கள், கருத்தரங்குகள், இலக்கிய அரங்குகள், கலைநிகழ்ச்சிகள், புத்தகக் கண்காட்சி முதலியவை அமைந்திருந்தன. விழாமலர்களின் வெளியீடு, எழுத்தாளர்கள், கலைஞர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவித்தல் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## 2. 4. சிறப்புப் பேருரைகள்

பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள காலப்பகுதியில் ஏற்பாடு செய்யப்பெற்ற சொற்பொழிவுகள் பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திகதி | பொருள் | சொற்பொழிவாளர் |
|---|---|---|
| 6 - 4 - 93 | 'சிலப்பதிகாரத்தில் இசைச் செய்திகள்' | டாக்டர் சேலம் ஜெயலக்ஷ்மி தமிழ்நாடு. |
| 16 - 6 - 93 | ''பண்பாட்டை விளங்கிக் கொள்வதில் நாட்டாரியலின் முக்கியத்துவம்'' | கலாநிதி என். இரத்தினபாலா ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம். |
| 23 - 6 - 93 | இலங்கைத் தமிழரின் பாரம்பரிய அரங்குக் கலைகள் | கலாநிதி சி. மௌனகுரு கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 30 - 6 - 93 | தமிழ்நாட்டார் பாடல்களைச் சேகரித்தல், தொகுத்தல், பதிப்பித்தல் - ஒரு விமர்சன மதிப்பீடு | திரு. செ. யோகராசா கிழக்குப் பல்கலைக் கழகம் |
| 7 - 8 - 93 | தூது நடந்ததும் தூதால் நடந்ததும் | கவிஞர் சுகிசிவம் தமிழ்நாடு. |

## 2. 5. இலக்கிய அரங்குகள்

24 - 2 - 93 அன்று இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் நிகழ்ந்த கவிதா அமர்வில் இந்தியாவைச் சேர்ந்த கவிஞர் இளந்தேவன், திருமதி சந்திர காந்தி முத்துராமலிங்கம், இலங்கையைச் சேர்ந்த கே. எஸ். நடராஜா, சில்லையூர் செல்வராசன், இ. அம்பிகைபாகன் ஆகிய கவிஞர்கள் பங்குபற்றினர்.

10 - 4 - 93 அன்று விசேடமாக ஏற்பாடு செய்யப்பெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டின் பிரபல கவிஞரான கவிமாமணி மதிவண்ணன் கவிதைகளைப் பாடியதுடன், தமிழ் கவிதைத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளைப்பற்றியும் உரையாற்னார். இந்நிகழ்ச்சியின்போது, புத்தாண்டையொட்டி வீரகேசரிப் பத்திரிகை, இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சுடன் இணைந்து ஒற்றுமைப்பட்டு ஒலிக்கட்டும் – இன ஒற்றுமை எனும் பொருளில் நடத்திய கவிதைப் போட்டியில் முதல் மூன்று சிறந்த கவிதைகளை எழுதிப் பரிசு பெற்றவர்களுக்கு முறையே ரூபா 5000/- ரூபா 3000/ , ரூபா 2000/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டன.

14 - 3 - 93 அன்று ''கற்பனைத்தேரோட்டும் கவிஞர்கள் குற்றவாளிகளா'' என்னும் தலைப்பில் நடைபெற்ற புதுமையான இலக்கிய அரங்கில் மதுரையிலுள்ள இரு பிரபல கல்லூரிகளின் தமிழ்த்துறைத் தலைவர்களாகிய டாக்டர் பி. சொல்விளங்கும்பெருமாள், டாக்டர் திருமதி சக்திபெருமாள் ஆகிய இருவரும் பங்கேற்றனர்.

## 2. 6. திரைப்பட வட்டம்

இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் பின்வரும் வீடியோப் படங்கள் காண்பிக்கப்பட்டன.

24 – 4 – 93 மிறிட்ச் மசால (ஹிந்தி)
தயாரிப்பு: மீராநாயர்

25 – 4 - 93 அவள் அப்படித்தான்(தமிழ்)
தயாரிப்பு: ருத்ரையா

## 2. 7. வெளியீடுகள்

1992ம் ஆண்டு தமிழ் மொழியியல் சம்பந்தமாக நடத்தப்பெற்ற பிரந்தியக்க ருத்தரங்கு அமர்வுகள் ''மொழி நவீனத்துவம் — தொடர்பாடல்'' எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பில் தொகுக்கப்பட்டு திணைக்களத்தினால் நூலாக வெளியிடப்பட்டது.

இந்நூலின் உத்தியோக ரீதியாக வெளியீட்டு வைபவம் 1993 ஆகஸ்ட் 8ந் திகதி நடைபெற்றபோது, கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட பிரதான தீர்மானங்களைப் பற்றிய கலந்துரையாடலும் அவை தொடர்பாக இனி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சுருக்கமாக ஆராயப்பட்டன.

## 2. 8. கலைஞர்களுக்கும் நிறுவனங்களுக்கும் நிதி உதவி

பொருளாதார இடர்ப் பாடுற்றிருக்கும் 5 கலைஞர்களுக்கு மொத்தம் ரூபா 11,000/- நிதி உதவி அளிக்கப்பட்டது. 3 நிறுவனங்களுக்கு மானியமாக மொத்தம் ரூபா 7432/- வழங்கப்பட்டது.

# 3. இந்து தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சி

பொருத்தமானவர்களைத் தேடிப்பிடிப்பதிலுள்ள சிரமம் காரணமாக திணைக்களத்தின் ஆராய்ச்சித்துறையின் முக்கிய பதவிகள் நிரப்பப்படாமல் வெற்றிடமாக இருந்தபோதிலும், இவ்வாண்டில் ஆராய்ச்சி தொடர்பான நடவடிக்கைகள் குறிப்பிடக் கூடியளவு பெருகியுள்ளன.

## 3. 1. இந்து கலைக் களஞ்சியம்

இந்து கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது தொகுதி உத்தியோகபூர்வமாக 1993 பெப்ரவரி 21ந் திகதி வெளியிட்டு வைக்கப்பட்டது. மூன்றாவது தொகுதிக்கான வேலைகள் ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வேலைகள் அனேகமாக 1994ம் ஆண்டின் முற்பகுதியில் நிறைவுறும். கலாநிதி எஸ். பத்மநாதன் (யாழ். பல்கலைக்கழகம்) தலைவராகவும் பிரதான தொகுப்பாசிரியராகவும், திரு.எஸ். தெய்வநாயகம் (ஆராய்ச்சி அலுவலர்) உதவி ஆசிரியராகவும் அமர்ந்து இரண்டாவது தொகுதியை தயாரித்த அதே குழுவினரே இது தொடர்பான வேலைகளை மேற்கொண்டுள்ளனர். தென்னிந்திய அறிஞர்களும் இத்தொகுதிக்கென இம்முறை விஷயங்களை எழுத இருப்பது குறிப்பிடப்பட வேண்டிய அம்சமாகும்.

## 3. 2. இந்து ஆலயங்களின் வரலாறு

இது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் திட்டமாகும். இதுவரை பின்வரும் 8 முக்கிய ஆலயங்களின் வரலாறுகள் எழுதி முடிக்கப் பெற்றுள்ளன.

(அ) தான்தோன்றீஸ்வரர் கோயில்
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

(ஆ) கண்ணகி அம்மன் கோயில்
செட்டிபாளையம் மட்டக்களப்பு.

(இ) ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில்
நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்

(ஈ) ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில்
வெருகல், திருக்கோணமலை.

(உ) நாகதம்பிரான் கோயில்
பண்டாரியாவெளி மட்டக்களப்பு.

(ஊ) ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்
கொடுவாமடு, மட்டக்களப்பு

(எ) ஸ்ரீ பரமநயினார் கோயில்
ஆரையம்பதி, மட்டக்களப்பு

(ஏ) ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோயில்
சித்தாண்டி, மட்டக்களப்பு

மேலே குறிப்பிட்ட கோயில்களின் வரலாறுகள் முதலாவது தொகுதியாக வெளியிடப்படும். இதனைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் வரலாறுகளை பல தொகுதிகளாக வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3. 3. ஏனைய வெளியீடுகள்

3. 3. 1. பண்பாடு

திணைக்களத்தினால் கிரமமான அடிப்படையில் வெளியிடப்படும் பண்பாட்டுத்துறை தொடர்பான ஆய்வுப் பருவ இதழாகிய இதன் ஏப்ரல் மாத ஒக்டோபர் மாத இதழ்கள் இவ்வாண்டில் வெளியாகியுள்ளன.

3. 3. 2. கோணேசர் கல்வெட்டு

இது 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த இலக்கியப் படைப்பாகும். பண்டிதர் இ. வடிவேலு அவர்களினால் அண்மையில் தொகுக்கப்பட்டு, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி எஸ். பத்மநாதன் அவர்களின் ஆழமான பார்வையுடன் அமைந்த விமர்சனத்துடன் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

3. 3. 3. தக்ஷிண கைலாச புராணம்

திருக்கோணமலை கோணேசர் கோவில் தொடர்பாக 16ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட முக்கியமான நூல் இது. பண்டிதர் கே. எஸ். நடராசா அவர்கள் அண்மையில் தொகுத்துள்ள இந் நூல், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி எஸ். பத்மநாதன் அவர்களின் முன்னுரையோடு திணைக்களத்தினால் வெளியிடப்படுவதற்கு தயாராகவுள்ளது.

## 3. 4. ஏனைய ஆய்வுத்திட்டங்கள்

1992ல் தொடக்கப்பெற்ற ''சடங்குகளின் பாதையில் — இலங்கைத் தமிழர்களின் சடங்குகள்,, என்னும் ஆய்வுத்திட்டத்தில், பல்கலைக்கழக அறிஞர்களின் மேற்பார்வையில், இப்போது ஏழு இளம் ஆய்வாளர்கள் இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ''மரணக்கிரியைகள்'', ''பூப்பெய்தல்'', ''திருமணங்கள்'' பற்றிய மூன்று ஆய்வறிக்கைகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளன. இவற்றை விரைவில் அச்சிட்டு வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில், நான்காண்டு கற்கைநெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பயன்படுத்தக் கூடிய ''திராவிட கலாசாரம்'' என்னும் பாட நூலினைத் தயாரிப்பதற்கான மற்றொரு திட்டமும் மேற்கொள்ளப் படவுள்ளது.

இந்துக் குருமார்களைப் பயிற்றுவிப்பதற்கான வழிகாட்டிக் குறிப்புக்களை வரைவதற்குரிய மற்றொரு திட்டமும் இப்பொழுது தொடங்கப் பட்டுள்ளது.

## 3. 5. ஆய்வு நூலகம்

இந்நூலகம் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது. 1992ம் ஆண்டில் 2774 நூல்கள் இருந்தன. இவ்வாண்டில் மேலும் 940 நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

# 4. இந்து கலாசார நிதியம்

இந்து கலாசார நிதியம், பின்வரும் குறிக்கோள்களுடன், 1985ம் ஆண்டின் பாராளு மன்றச் சட்ட இல. 31ன் படி நிறுவப்பெற்றது.

(அ) இந்துக் கோயில்கள் மற்றும் இந்துசமய நிறுவனங்கள் அல்லது மன்றங்களுக்கு அவற்றின் சமய, கலாசார, கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக நிதி உதவியும் மற்றும் உதவிகளையும் அளிப்பது.

(ஆ) ஏதாவது இந்து ஆலயத்தை அல்லது அவ்வாறான ஆலயத்திற்குரிய சொத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினை செப்பனிடுவதற்கு, புனரமைப்பதற்கு, அல்லது அபிவிருத்தி செய்தற்கு நிதி உதவியையும் மற்றும் உதவிகளையும் வழங்குவது.

(இ) இந்துசமயம் தொடர்பான நூல்களை எழுத மொழிபெயர்ப்புகளுட்பட மேற்கொள்ளப்படும் ஆய்வு முயற்சிகளுக்கும், ஆய்வு, வெளியீடு, மொழிபெயர்ப்புகளைச் செய்வதற்கான நிறுவனங்களை தோற்றுவித்து வளர்த்து அபிவிருத்தி செய்வதற்கும் நிதி உதவியையும் மற்றும் உதவிகளையும் அளிப்பது.

(ஈ) இந்து மக்களுக்குப் பயன் நல்கவல்லது என இயக்குநர் குழாம் கருதுகின்ற சமயம் அல்லது கலாசார அபிவிருத்தி தொடர்பான நோக்கங்களுக்கு உதவுவது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரே இந்நிதியத்தின் பிரதான நிர்வாக அதிகாரி யாவார். திணைக்களத்தின் வரவு செலவு மதிப்பீட்டில் இந்நிதியத்துக்கென வருடாந்த மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இந்நிதியத்துக்கென கிடைக்கும் தொகை ரூபா 100,000/-.

திட்டமிடப்பட்ட சில நிகழ்ச்சிகளையும், நடவடிக்கைகளையும், போதிய நிதியின்மை காரணமாகத் தொடக்க முடியவில்லை. எனினும் விற்பனை நிலையம் திருப்திகரமான முறையில் செயற்படுகின்றது. ஆலயங்களுக்குத் தேவைப்படும் சிலைகள், பூஜைப் பொருட்கள் இந்நிலையத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. சமய சம்பந்தமான நூல்கள், குறிப்பாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவை, இந்நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பல்துறை சார்ந்த தரமான நூல்களை வாசகர்களுக்குக் கிடைக்கச் செய்வதில் திணைக்களத்தின் புத்தகக் கழகம் மிகுந்த கவனஞ் செலுத்தி வருகின்றது. சுமார் 600 நூல்களின் பிரதிகள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு நூலகங்கள், பாடசாலைகள், மற்றும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பெற்றன. இந்தியாவிலும் இலங்கையிலும் வெளியிடப்படும் முக்கிய நூல்களைப் பற்றிய தகவல்களைத் தமிழில் கொண்ட ''செய்தி மடல்'' புத்தகக் கழகத்தால் வெளியிடப்படுகின்றது. புதிய நூல்களும் மற்றும் எமது ஆய்வு நூலகத்திலுள்ள அரிய நூல்களும் அடங்கிய புத்தகக் கண்காட்சிகள் கொழும்பு, திருக்கோணமலை, கல்முனை, பண்டாரவளை, நோர்வூட் முதலிய இடங்களில் நடத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன் பிரிண்டர்ஸ் கொழும்பு 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org